யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் – I | நேரம் : 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தை விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.

### பகுதி – I

(01) விண்ணக வாயில் அல்லது இறைவனின் கதவு என .................................. கிரேக்கத்தில் பொருள் கொள்ளப்படுகின்றது. இடைவெளிக்குப் பொருத்தமானது
1) உரோமை 2) கிரேக்கம் 3) பாரசீகம்
4) பபிலோனியா 5) எகிப்து

(02) முதன்முதலில் நாணயங்களைப் பயன்படுத்திய நாகரிகம்
1) எகிப்து 2) மொசப்பத்தேமியா 3) கிரேக்கம்
4) உரோமை 5) யூதம்

(03) பிரான்சிஸ்கு அசிசியார் சபையின் தொட்டில் என அழைக்கப்படுவது
1) அசிசிகுடில் 2) போர்சியுஸ்குலாவே 3) இத்தாலி
4) பிரான்ஸ் 5) பெர்னாட்குவின்தவான்

agaram.lk

(04) "டொமினிகன் துறவறத்தாரை தனித்துறவற சபையாக அங்கீகரித்த திருத்தந்தை
1) 3ம் லூசியன் 2) கிரகோரியார் 3) 3வது இன்னொசென்ட்
4) 3ம் ஒனோரியஸ் 5) கொலம்பஸ்

(05) பழைய இஸ்ராயேலரின் இறுதி நீதிபதி (நடுவர்)
1) தானியேல் 2) சாம்ஸ்சன் 3) யோசுவா
4) தெபோரா 5) சாமுவேல்

(06) தென்னரசில் வாழ்ந்த இரு கோத்திரங்களும் எவை?
1) லேவி, பெஞ்சமின் 2) சிமியோன், லேவி 3) பெஞ்சமின், சிமியோன்
4) யூதா, பெஞ்சமின் 5) யூதா, சிமியோன்

(07) "........................ நீர் போய் உமக்கு உள்ளவற்றை விற்று ஏழைகளுக்கு கொடும். அப்போது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்..." என்ற வார்த்தையால் தூண்டப்பட்டு துறவியானவர்
1) புனித தேப்ஸ் சின்னப்பர் 2) எகிப்து அந்தோனியார் 3) புனித பக்கோமியுஸ்
4) புனித ஆசீர்வாதப்பர் 5) புனித பசில்

(08) புனித கயுசேபியுஸ் துறவற வாழ்க்கைக்கு ஆற்றிய பணி
1) துறவற ஒழுக்க சட்டங்களை அறிமுகம் செய்தமை
2) ஆன்மீக பயிற்சி அளித்தல்
3) பெண்களுக்கான ஆச்சிரமத்தை உருவாக்கியமை
4) பிரமச்சாரிய வாழ்க்கை முறையை அறிமுகம் செய்தல்
5) பாடசாலைகளை உருவாக்கியமை



Scanned with CamScanner

(09) இயேசுவின் மலைப்பொழிவு எமக்கு,

1) சட்ட நூலாக தரப்படுகின்றது
2) அறநெறி ஒழுங்குகளை வழங்குகிறது
3) இறைவாக்குகள் நிறைவேறுவதை எடுத்துக்காட்டுகின்றது
4) நீதியைப் பற்றி எடுத்துரைக்கின்றது
5) அன்பின் மேன்மையை வெளிப்படுத்துகின்றது

(10) யூத சமூகத்தில் உயர்ந்த வகுப்பினராகக் கருதப்பட்டோர்

1) பெரிய குருக்களும் பரிசேயர்களும்
2) வரிவசூலிப்போரும் பரிசேயர்களும்
3) சதுசேயர்களும் பரிசேயர்களும்
4) சதுசேயர்களும் பெரிய குருக்களும்
5) சதுசேயர்களும் மறைநூல்வல்லுனரும்

(11) திருச்சபையின் பழமைவாய்ந்த இரு முக்கிய விழாக்கள்

1) கிறிஸ்து பிறப்பு விழா, ஆண்டவரின் திருக்காட்சி விழா
2) கூடார விழா, புளியாத அப்ப விழா
3) கோயில் அர்ப்பண விழா, கூடார விழா
4) கிறிஸ்து பிறப்பு விழா, கூடார விழா
5) பாஸ்கா விழா, பெந்தக்கோஸ்தே விழா

(12) அந்தியோக்கிய இறையியல் கல்லூரி தமது இறையியல் ஆக்கப்பணியில் பயன்படுத்திய மெய்யியல் சிந்தனைக்கு உரித்துடையவர்

1) அரிஸ்ரோட்டில்
2) பிளேற்றோ
3) நொஸ்திக்கர்
4) எப்பிக்கூரர்
5) ஸ்தொயிக்கர்

(13) பகுத்தறிவிற்கு முதலிடம் கொடுத்து, சிக்கல்களை அலசி ஆராய்ந்து முடிவுகளை எடுக்கும் முறைமையை உலகிற்கு வழங்கி புதிய கண்டுபிடிப்புக்களிலும் பங்களிப்புச் செய்தவர்கள்

1) உரோமையர்
2) யூதர்
3) பபிலோனியர்
4) பாரசீகர்
5) கிரேக்கர்

(14) எபிரேய மொழியிலிருந்து விவிலியத்தை அரமேய மொழியில் மொழிபெயர்த்தமை ........................ எனப்பட்டது.

1) செப்துவாஜிந்
2) வுல்கத்தா
3) தார்கும்
4) ஹெல்லனிசம்
5) தால்மூட்

(15) 'அப்போலொஜியா' என்ற நூலை அன்ரோனினஸ் பியுஸ் என்ற பேரரசருக்கு எழுதிய எழுத்தாளர்

1) புனித அத்தனாசியுஸ்
2) புனித இரனேயுஸ்
3) ஓரிஜென்
4) புனித ஜஸ்டின்
5) புனித அகுஸ்தீனார்

(16) 'திருச்சபைக்கு ஊன்றுகோல்' என்ற பெயரால் அழைக்கப் பெற்றவர்

1) புனித நிஸ்ஸா கிரகோரியார்
2) புனித கிரகோரி நாசியான்சன்
3) புனித அம்புரோசியார்
4) புனித பசில்
5) புனித அத்தனாசியுஸ்

(17) ஸ்பானியா நாட்டில் உள்ள பழமையான பல்கலைக்கழகம்

1) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம்
2) சலமன்கா பல்கலைக்கழகம்
3) ஒக்ஸ்பர்ட் பல்கலைக்கழகம்
4) பரிஸ் பல்கலைக்கழகம்
5) பொலஞ்ஞா பல்கலைக்கழகம்


agaram.lk
Scanned with CamScanner

(18) ஆசியாவில் அதிக கத்தோலிக்கரைக் கொண்ட நாடு

1) இந்தியா 2) சீனா 3) கொரியா 4) மீனா 5) பிலிப்பைன்ஸ்

(19) அலரிக் என்பவரின் தலைமையின் கீழ் உரோமையை அழித்த கோத்திரம்

1) லம்பார்ட்டியோஸ் 2) பிராங்ஸ் 3) விசிகோத்ஸ் 4) வன்டல்ஸ் 5) அங்கிள்ஸ்

(20) "பரிணாமம் உயிர் பெறுவது வல்லமை ஒன்றினாலேயே, அவ்வல்லமை அன்பு எனும் அகபே அன்பு" என்று கூறியவர்

1) நியூட்டன் 2) கிரகெம்பெல் 3) அயின்ஸ்டயின் 4) பிலெமின் 5) சார்டேன்

(21) அடேயோடாரஸ் என்பதன் பொருளாவது

1) கடவுள் நம்மோடு
2) கடவுள் நம்மைக் காப்பவர்
3) என்றென்றும் நித்தியர் கடவுள்
4) இறைவனால் கொடுக்கப்பட்டவர்
5) கடவுளைச் சுமப்பவர்

(22) இலத்தீன் மொழிப் பாரம்பரியத்தை மாற்றி, இத்தாலி மொழியில் The Divine Comedy என்ற இலக்கியத்தைப் படைத்தவர்

1) டான்டே அலிகியேரி 2) தோமஸ் ஆ கெம்பே 3) அவிலா திரேசா 4) சிலுவை அருளப்பர் 5) கிரகோரியார்

(23) வடஅரசை சிறந்த நெறிவாழ்வுக்கு இட்டுச் சென்ற இறைவாக்கினர்களுள் பொருத்தமானவர்கள்

1) எசாயா, மீக்கா 2) எரேமியா, எலியா 3) ஆமோஸ், ஒசேயா 4) ஆமோஸ், எசாயா 5) ஒசேயா, எசேக்கியேல்

(24) மெதடிஸ்ட் திருச்சபையின் நிறுவுனர்

1) 8ஆம் ஹென்றி 2) வில்லியம் கேரி 3) தோமஸ் முன்ஸ்ரர் 4) உல்றிச் சுவிங்கிலி 5) யோண் வெஸ்லி

(25) இரவலர் சபையை சாராத துறவற சபை

1) வல்தேசியன் துறவறசபை 2) பிரான்சிஸ்கன் துறவறசபை 3) சுவாமிநாதர் துறவறசபை 4) குளுணி துறவறசபை 5) கார்மேல் துறவறசபை

(26) மாட்டின் லூதரின் வாழ்வுடன் பொருந்தாத கூற்று எது?

1) அவர் ஜேர்மன் நாட்டவர். அகுஸ்தீனார் சபையை சார்ந்த துறவியாவார்
2) விசுவாசத்தினால் மட்டும் ஒருவர் நீதிமானாக முடியுமெனப் போதித்தவர்
3) அவர் பரிபூரணபலன் என்பதற்கு எதிராகப் போதித்தார்
4) அவரது மறைக்கல்வி நூல் வினா – விடை வடிவத்தில் அமைந்தது
5) அவர் திருமுழுக்கையும் உறுதிப்பூசுதலையும் மட்டும் திருவருட்சாதனங்களாக ஏற்றுக்கொண்டார்

(27) யூத நாகரிகத்தில் செல்வாக்குச் செலுத்தாத நாகரிகம்

1) பபிலோனிய நாகரிகம்
2) சுமேரிய நாகரிகம்
3) அசீரிய நாகரிகம்
4) மொசப்பத்தேமிய நாகரிகம்
5) ஐரோப்பிய நாகரிகம்



agaram.lk
Scanned with CamScanner

(28) பிலிப்ஸ் பல்தேயுஸ் அடிகளார் இலங்கைக்கு வருகை தந்ததன் நோக்கமாகக் கருதப்படுபவை

A - பாடசாலைகளைக் கட்டுவதற்கு

B - இராணுவத்தைப் பொறுப்பேற்பதற்கு

C - கல்வின் மதத்தைப் பரப்புவதற்கு

D - ஆலயங்களை அமைப்பதற்கு

E - வியாபாரத் தளங்களை பொறுப்பேற்பதற்கு

1) A யும் B யும் 2) B யும் D யும் 3) C யும் D யும்

4) A யும் C யும் 5) B யும் C யும்

(29) யூத சமுதாயத்தில் நிலவிய துறவற வாழ்வு முறையை குறித்து நிற்பவர்கள்

1) பரிசேயர் 2) லேவியர் 3) எஸ்சீனர்

4) சதுசேயர் 5) யூதர்கள்

(30) ஒன்றிணைந்த பலஸ்தீன சாம்ராச்சியம் உருவாகுவதற்கு காரணமான அரசர்கள்

A - சவுல்

B - ரெபோவாம்

C - ரெகொபோவாம்

D - தாவீது

E - சாலமோன்

1) ADE 2) ACE 3) CDE

4) ABC 5) BDE

(31) கல்வினின் சீர்திருத்தம் தொடர்பான பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

A - கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள் எனும் நூலை வெளியிட்டார்.

B - ஆதாமின் வீழ்ச்சியால் மனிதன் இறைவனின் அடிமையாகி விட்டான்.

C - திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் திருமணமும் மட்டுமே திருவருட்சாதனங்களாகக் கொள்ளப்பட முடியும்.

D - இறைவன் எவரை குறித்து வைத்தாரோ அவரே விண்ணகம் செல்வார்.

E - தேவதாய்க்கு எதிராகவும் திருப்பயணங்களுக்கு எதிராவும் போதித்தார்.

மேலுள்ளவற்றுள் கல்வினின் பிரதான கற்பித்தல்கள்

1) ABD 2) ABE 3) ACD

4) BCD 5) BDE

(32) மத்திய யுகத்தில் தோன்றி அரசியல் சிந்தனைகளில் முதன்மையானது

1) உலக அரசியல் 2) தேசிய அரசியல் 3) உரோமைப் பேரரசு

4) தேசப்பற்று 5) சுதந்திரம்

(33) ஒளி, இருள் ஆகிய அரசுகள் இரண்டையும் பற்றிய பேதகம்

1) மனிக்கேய பேதகம் 2) நெஸ்தோரிய பேதகம் 3) ஆரிய பேதகம்

4) பொலாஜி பேதகம் 5) மோனோதெலோ பேதகம்

(34) இந்தியாவில் திருத்தந்தை வழிகாட்டல்களை ஏற்றுக்கொண்டு மேற்கு சிரிய மரபோடு தொடர்பு கொண்ட கத்தோலிக்கர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்

1) இலத்தீன் திருச்சபையினர் 2) சீரோ மலபார் திருச்சபையினர்

3) சீரோ மலங்கரா திருச்சபையினர் 4) மார்தோமா திருச்சபையினர்

5) வைதீக சிரிய திருச்சபையினர்



agaram.lk
Scanned with CamScanner

(35) கொரியாவில் கிறிஸ்தவம் பரவக் காரணமாக இருந்தவர்

1) கொனிசியூகினாகா 2) யூலியா ஒற்றா 3) ஜேம்ஸ் சூடன்மேர்
4) யிக்வாங் யெயோங் 5) கோறேஸ் அன்டர்வூட்

(36) அப்போஸ்தலர் தோமையார் இந்தியாவிற்கு வருகை தந்தது

1) 1ம் நூற்றாண்டு (52) 2) 2ம் நூற்றாண்டு (114) 3) 2ம் நூற்றாண்டு (157)
4) 2ம் நூற்றாண்டு (162) 5) 1ம் நூற்றாண்டு (72)

(37) கிறிஸ்தவம் ஒளி வீசும் மதம் என அழைக்கப்பட்ட நாடு

1) கொரியா 2) பிலிப்பைன்ஸ் 3) ஜப்பான்
4) இந்தியா 5) சீனா

(38) தர்மபாலன் திருமுழுக்குப் பெற்று டொன் யுவான் ஆனது

1) 1546 2) 1566 3) 1556
4) 1543 5) 1553

(39) அச்சு வேலையை அறிமுகப்படுத்தி மறைபரப்புப் பணியை முக்கிய நிகழ்வாக்கிய ஐரோப்பியர்

1) ஆங்கிலேயர் 2) போர்த்துக்கேயர் 3) ஒல்லாந்தர்
4) ஸ்பானியர் 5) இலண்டன் மிசனறிமார்

(40) ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளில் வாழும் கத்தோலிக்கருக்கு முழுமையான மதச் சுதந்திரம் கிடைத்தது

1) 1829 2) 1815 3) 1805
4) 1806 5) 1802

(41) "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதே" என தூய பவுல் குறிப்பிட்டிருப்பது

1) உரோமையருக்கு எழுதிய திருமுகத்தில்
2) கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில்
3) கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில்
4) தெசலோனிக்கருக்கு எழுதிய திருமுகத்தில்
5) தீத்துவுக்கு எழுதிய திருமுகத்தில்

(42) உரோமய முக்கோண அதிகாரப் படிமுறையை ஒத்த அதிகார அமைப்பை திருச்சபையில் முடிவுக்கு கொண்டு வந்த சங்கம்

1) திரிதெந்தின் பொதுச்சங்கம் 2) மிலான் அரசசாசனம்
3) இரண்டாம் வத்திக்கான் சங்கம் 4) எபேசு பொதுச்சங்கம்
5) லாத்தரன் பொதுச்சங்கம்

(43) புனித அத்தனாசியுஸ் எழுதிய நூல்களல்லாதது

1) வேதவிளக்கம்
2) வனத்து அந்தோனியார் வரலாறு
3) அடிப்படைகள்
4) ஆரிய பேதகத்திற்கு எதிரான நூல்கள்
5) இறைவார்த்தை மனுவுருவாதல்

(44) சமூகப் பணிகளில் முன்னணிவகித்து இறையியலுக்கு ஆர்வம் காட்டாத பல்கலைக்கழகம்

1) பரிஸ் 2) ஒக்ஸ் போர்ட் 3) கேம்பிறிட்ஜ்
4) சலமன்கா 5) பொலஞ்ஞா



agaram.lk
Scanned with CamScanner

(45) A - வடஆபிரிக்காவின் தகாஸ்தே எனும் ஊரில் பிறந்தார்.

B - கத்தோலிக்க பாடசாலைகளுக்கு பாதுகாவலராக உள்ளார்.

C - 'இறைவனின் நகரம்' எனும் நூலை முன்வைத்தார்.

D - உரோம நேபிள்ஸ் பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

E - நற்கருணைப் பாடல்களை எழுதினார்.

மேற்கூறப்பட்டவற்றுள் தோமஸ் அக்குவினாஸ் என்பவருடன் தொடர்புடைய கூற்றுகள்

1) ABC 2) ACD 3) BCD

4) BDE 5) ADE

(46) - சித்திரம் அழகாகவும் ஒளியூட்டுவதாகவும் இருக்கும்.

- இச்சித்திரங்கள் வன்மையானது.

- அணியப்பட்டுள்ள ஆடையில் சுருக்கங்கள் இல்லை.

மேற்கூறப்பட்ட பண்புகள் எந்தக் கலைக்குரியவையாக கருதப்படுகின்றன

1) மொசேயிக் ஓவியக்கலை 2) வர்ணக்கண்ணாடிக்கலை 3) பைசென்தியன்கலை

4) சித்திரக்கலை 5) ஐகோன் உருவக்கலை

(47) கிறிஸ்தவ நோக்கத்தைக் கொண்டிராத லியோனாடோ டாவின்சியின் ஓவியம்

1) இறுதி இராவுணவு 2) நடுத்தீர்வை 3) உலகப்படைப்பு

4) கண்ணாடிச் சித்திரம் 5) மொனாலிசா

(48) A - இலங்கை வரலாறு எனும் ஆங்கில நூலை எழுதினார்.

B - மத்தேயு நற்செய்தியை சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தவர்.

C - 2ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னரே கலாசார வழிபாடு இடம்பெற வேண்டுமெனக் கூறியவர்

D - இயேசுசபையின் திருநிலைப்படுத்தப்பட்ட முதலாவது சிங்களக் குருவானவர்

E - சிங்கள சஞ்சிகையாகிய 'பக்தி பிரபோதன' என்பதன் ஆசிரியராக விளங்கினார்

மேற்கூறப்பட்டவற்றுள் மேதகு எட்மன் பீரிஸ் ஆண்டகையுடன் தொடர்பற்றவையாக கருதப்படுபவை

1) B யும் C யும் 2) B யும் E யும் 3) C யும் E யும்

4) A யும் D யும் 5) B யும் C யும் E யும்

agaram.lk

(49) தமிழ் தாயின் பெருமையை உலகெங்கும் பரப்புவதற்காக Tamil Culture என்ற சஞ்சிகையை ஆரம்பித்து, அதன் ஆசிரியராகவும் இருந்தவர்

1) அருட்பணி தாவீது அடிகள்

2) அருட்பணி தனிநாயகம் அடிகள்

3) அருட்பணி சுவாமி ஞானப்பிரகாசியார் அடிகள்

4) அருட்பணி பீட்டர்பிள்ளை அடிகள்

5) அருட்பணி ஆர்.எஸ்.டி சேரம் அடிகள்

(50) 1841 இல் இலங்கையில் மத்திய பாடசாலை ஆணைக்குழுவொன்றை அமைத்தவர்

1) ஆளுநர் ஸ்ருவட்மக்கன்ஸி

2) கிறிஸ்தோபர் பொஞ்சீன் அடிகள்

3) வண. கிறிஸ்ரியன் டேவிட்

4) வண. மைரன் உவின் சிலோ

5) ஆளுநர் தோமஸ் மெயிற்லாண்ட்



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவ நாகரிகம் - II | நேரம் : 3 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி – I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

(01) i) கி.பி 1ம் நூற்றாண்டில் உரோமை நிர்வாகத்தின் நான்கு பிரதான அம்சங்களைத் தருக.

ii) மிஸ்னா என்னும் நூலில் குறிப்பிடப்படும் தலைமைச் சங்கத்தின் சட்ட விதிமுறைகள் நான்கு தருக.

iii) நீதித் தலைவர்கள் நால்வரைக் குறிப்பிடுக.

iv) இஸ்ரயேலர் மத்தியில் அரசர்கள் உருவாவதற்கான காரணங்கள் நான்கு தருக.

v) புனித பசில் துறவற வாழ்விற்காக ஒழுங்கமைத்த சட்டக் கோவையில் குறிப்பிடப்படும் அம்சங்கள் நான்கு தருக.

(02) i) கிறிஸ்தவ யுகத்தின் முதல் ஐந்து நூற்றாண்டுகளில் வாழ்ந்த கிறிஸ்தவ சிந்தனையாளர்கள் நால்வரின் பெயர்களைக் குறிப்பிடுக.

ii) கோதிக் ஆலயங்களின் பண்புகள் நான்கு தருக.

agaram.lk

iii) கிறிஸ்தவ விஞ்ஞானியான சேர் ஐசக் நியூட்டன் விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பு நான்கு குறிப்பிடுக.

iv) மைக்கல் ஆஞ்சலோவின் உலகப் புகழ்பெற்ற ஓவியங்கள், கலைப்படைப்புக்கள் நான்கின் பெயர்களைக் குறிப்பிடுக.

v) இலங்கையின் கல்வித்துறைக்கு பாரிய பங்களிப்புச் செய்த கிறிஸ்தவ கல்விமான்கள் இருவரைக் குறிப்பிட்டு அவர்கள் ஆற்றிய பணிகள் இவ்விரண்டு எழுதுக.

(03) i) ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இலங்கையில் இயங்கிய பாடசாலை வகைகள் நான்கு தருக.

ii) இந்நாட்டில் பாடசாலைகள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டதனால் ஏற்பட்ட நன்மைகள் இரண்டும், தீமைகள் இரண்டும் தருக.

iii) கல்வின் ஜெனிவா நகரில் மேற்கொண்ட சீர்திருத்த செயற்பாடுகள் நான்கு குறிப்பிடுக.

iv) மத்திய யுகத்தில் திருச்சபை முக்கியத்துவம் கொடுத்த நான்கு விடயங்களைக் குறிப்பிடுக.

v) மத்திய யுகத்தில் திருச்சபையின் சீர்திருத்தத்தில் பங்களிப்புச் செய்த திருத்தந்தையர்கள் நால்வரைக் குறிப்பிடுக.



Scanned with CamScanner

## பகுதி – II

(04) துறவற வாழ்வு திருச்சபையின் ஆன்மீக வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்புச் செய்துள்ளன.

i) வனத்து தந்தையர்கள் குறித்து சிறு விளக்கம் தருக.

ii) சிஸ்ரேஷியன் துறவறசபை ஆரம்பமானதன் நோக்கத்தைக் குறிப்பிட்டு, இச்சபையினால் அன்றைய சமுதாயத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகளையும் குறிப்பிடுக.

iii) திருச்சபையின் மறுமலர்ச்சிக் காலத்தில் இயேசு சபையினர் ஆற்றிய பணிகளைச் சுருக்கமாகத் தருக.

iv) ஆசிர்வாதப்பர் துறவறசபையின் முன்மாதிரிகையான உடல் உழைப்பு ஐரோப்பிய நாகரிகம் உருவாவதற்கு உதவிய விதத்தை விளக்குக.

(05) கிறிஸ்தவ நாகரிகம் உருவாகியதனால் சமுதாய கலாச்சாரத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

i) மனிதன் சட்டத்தை அனுசரிப்பதனால் அல்ல மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே கடவுளுக்கு ஏற்புடையவன் ஆகிறான் எனும் பவுலின் படிப்பினையை விளக்குக.

ii) புனித பவுலின் உடலின் உயிர்ப்பு பற்றிய படிப்பினையை சுருக்கமாக விளக்குக.

iii) அந்தியோக்கிய இறையியல் கல்லூரியின் உருவாக்கத்தையும் அதன் சிறப்பியல்புகளையும் விளக்குக.

iv) கிரேக்க மொழியில் திருவிவிலியம் உருவாகிய முறையை விளக்குக.

(06) ஆசியாவின் கிறிஸ்தவம் வெகு விரைவாக பரவியது.

i) இந்தியாவில் காணப்பட்ட கீழைத்தேய திருச்சபை பற்றி சுருக்கமாக விளக்குக.

ii) 19ம் நூற்றாண்டுகளுக்கு முன் சீனாவில் கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்கான காரணங்களை முன்வைக்குக.

iii) புனித தோமையார் கிறிஸ்தவர்கள் பற்றி சிறு விளக்கவுரை தருக.

iv) இந்தியாவில் இலத்தீன் திருச்சபையின் அமைப்பு முறையினை விபரிக்குக.

agaram.lk

(07) “வெளிநாட்டோர் ஆட்சிக் காலத்தில் கல்விப்பணி முக்கிய இடம் வகித்தது”

i) இலங்கையில் கி. பி 1505 க்கு முன்னர் கிறிஸ்தவர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கான சான்றுகளை விளக்குக.

ii) ஆங்கிலேயர் காலக் கல்விமுறை குறிப்பிட்டு விளக்குக.

iii) போர்த்துக்கேயர் காலத்தில் பிரான்சிஸ்கன் சபையினர் இலங்கை மக்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பை விளக்குக.

iv) இலங்கையின் கல்விக்கு இன்றைய திருச்சபை ஆற்றியுள்ள பணிகளை விளக்குக.

(08) நாசரேத்தூர் இயேசுவின் கற்பித்தல்களை விளக்குவதற்குப் பாலஸ்தீன அரசியல், சமூக, கலாச்சாரப் பின்புலம் தொடர்பான அறிவு உதவியாயிருக்கும்.

i) யூதர்கள் கொண்டாடிய முக்கிய விழாக்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் இரண்டினை சுருக்கமாக விளக்குக.

ii) இயேசுவின் காலத்தில் யூத சமூகத்தில் காணப்பட்ட சமுதாயப் பிரிவுகளைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றை விளக்குக.

iii) இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் வழக்கிலிருந்த மண ஒப்பந்தம் பற்றி சிறு விளக்கவுரை தருக.

iv) இயேசுவின் காலத்தில் யூதர் மத்தியில் வழக்கிலிருந்த சுத்திகரிப்புச் சடங்கு, பாவப்பரிகாரச் சடங்கு என்பன பற்றி விபரிக்குக.



Scanned with CamScanner

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | கிறிஸ்தவ நாகரிகம் |
|---|---|---|

## கிறிஸ்தவ நாகரிகம் - I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | 4 | 11) | 5 | 21) | 4 | 31) | 1 | 41) | 2 |
| 02) | 2 | 12) | 1 | 22) | 1 | 32) | 2 | 42) | 3 |
| 03) | 2 | 13) | 5 | 23) | 3 | 33) | 1 | 43) | 3 |
| 04) | 4 | 14) | 3 | 24) | 5 | 34) | 3 | 44) | 5 |
| 05) | 5 | 15) | 4 | 25) | 4 | 35) | 1 | 45) | 4 |
| 06) | 4 | 16) | 1 | 26) | 5 | 36) | 1 | 46) | 1 |
| 07) | 2 | 17) | 2 | 27) | 5 | 37) | 3 | 47) | 5 |
| 08) | 3 | 18) | 5 | 28) | 5 | 38) | 3 | 48) | 4 |
| 09) | 2 | 19) | 3 | 29) | 3 | 39) | 3 | 49) | 2 |
| 10) | 3 | 20) | 5 | 30) | 1 | 40) | 1 | 50) | 1 |

*(2 × 50 = 100 புள்ளிகள்)*

## கிறிஸ்தவ நாகரிகம் - II

### பகுதி - I

01) (i) சட்டம், நீதி, நிர்வாகம் சிறப்புற்றிருந்தது. உரோமை நகரங்களெல்லாம் வீதிகள் நெடுஞ்சாலைகள் அமைக்கப்பட்டு போக்குவரத்து சிறப்புற்றிருந்தது.
- உரோமைப் பேரரசின் கீழ் எங்கும் நிலவிய அமைதி
- எல்லா நாடுகளும் ஒரே ஆட்சியின் கீழ் இருந்தமை
- எங்கும் கிரேக்க மொழிபேசப்பட்டமை

(4 புள்ளி)

(ii) எருசலேமில் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபத்திலேயே கூட்டப்பட்ட வேண்டும்.
- ஒரு யூதன் தன்மதத்திற்கு எதிராக குற்றம் இழைத்தால் அவனுக்கு நீதித்தீர்ப்பு வழங்குவதற்காக இச்சங்கம் கூட்டப்படலாம்
- குற்றவாளியாக கருதப்பட்ட நபருக்கு எதிராக இரண்டு சாட்சிகள் தனித்தனியே விசாரணை செய்யப்படல் வேண்டும்.
- குற்றவாளிகள் முறையாக விசாரிக்கப்பட்டு விடுதலைத் தீர்ப்பாயின் அன்றைய நாளிலும் மரண தண்டனையாயின. இரு நாட்களுக்கு பின்னரே நிறைவேற்றப்பட வேண்டும்

(4 புள்ளி)

(4 புள்ளி)

(iii) யோசுவா, தெபோரா, கெதயோன், சம்சோன்

(iv)
- இஸ்ராயேல் மத்தியில் நீதிபதிகள் ஒழுங்காக நீதி செலுத்தவில்லை.
- அருகில் உள்ள மற்றைய நாடுகளில் அரசர் ஆட்சி ஏற்பட்டது
- அரசனைக் கொண்ட ஒரு அரசம், அதன் வாயிலாக மற்றவர்களுக்கு தனிநாடு என்ற தன்னடையாளமும் வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது.
- பகைவர்களை வெல்ல அரசனும் படைகளும் உருவாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டமை.

(4 புள்ளி)

(v)
- துறவிகள் ஒரே இல்லத்தில் வாழ்ந்தார்கள்
- குழுவாழ்க்கை வேலைத்திட்டங்களுக்கு ஏற்ப வாழ்க்கைக்கு வழிநடத்தப்பட்டமை
- உடல் உழைப்பைப் பயன்படுத்தி வேலை செய்ய வேண்டும்
- ஒழுங்கமைக்கப்பெற்ற வாழ்க்கைமுறை இருந்தமை

(4 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner

02) (i) புனித யஸ்ரின், புனித பசில், புனித அகுஸ்தினார், புனித இரனேயுஸ், புனித நிஸ்ஸா கிரகோரி, புனித நாசியன் கிரகோரி, புனித ஒரிஜன் (4 புள்ளி)

(ii) அரைவட்ட முகப்புகளுக்குப் பதிலாக கூரான முகப்பு பாவிக்கப்பட்டது
கட்டிடம் அமைக்கும்
கோதிக்கலைஞர்கள் முதலில் தட்டை அமைப்பதற்கு முக்கியத்தவம் கொடுத்தார்கள். கோதிக் ஆலய உட்பகுதி உரோமைய ஆலயத்தைப்போன்ற இரண்டு வரிசை தூண்களால் ஆனது கூரான முகப்பும் பூவடிவான ஜன்னலும் இவ்வாலயங்களின் விசேட அம்சமாகும். (4 புள்ளி)

(iii) திருவிவிலியம், விஞ்ஞானம் பற்றிய பல நூல்களை எழுதினார்
ஈர்ப்புவிசை இவரால் கண்டு பிடிக்கப்பட்டது
நிறங்களை அறிதல், சூரியமண்டலத்தைப் பற்றிய தகவல் வெளியிடல்,
பிரதிபிம்பம் காட்டும் தொலைநோக்கி கருவி ஒன்றை நிறுவுதல்
கடலில் ஏற்படும் ஏற்றம் இறக்கம் பற்றி பல தகவல்களை அறிந்து உலகிற்கு வெளிப்படுத்தினார். (4 புள்ளி)

(iv) பியற்றா சிற்பம் - நடுத்தீர்ப்பு ஓவியம்
பேதுரு ஆலய முகப்பு - தாவீது சிற்பம்
தாவீது சிற்பம்
உலகப்படைப்பு ஓவியம்
மோசே சிற்பம் (4 புள்ளி)

(v) - மேதகு எட்மன் பீரிஸ் ஆண்டகை -
1. 2ம் வத்திக்கான் சங்கத்திற்கு முன்னரே கலாசார வழிபாடு இடம்பெற வேண்டுமெனக் கூறியவர்.
2. பக்தி பிரபோதன சஞ்சிகையின் ஆசிரியராக விளங்கினார்.

அருட்பணி ஞானப்பிரகாசர் அடிகள்
1. 1904 ஆம் ஆண்ட யாழ்நகரிலே நல்லூர் சென்று 3,000 க்கும் மேற்பட்ட மக்களை கத்தோலிக்க மறையில் சேர்த்தார்.
2. பல நூல்களை எழுதியுள்ளார். உதாரணம் யாழ்ப்பாண வைபவமாலை ஊற்றுக்கள் யாழ் அரசனின் மறந்த காசுகள்

(4 புள்ளி)

(4 × 5 = 20 புள்ளி)

agaram.lk

03) (i) கோயில் பற்று பாடசாலைகள்
- செமினேரிகள்
- ஒல்லாந்தப் பாடசாலைகள்
- அனாதை இல்லங்கள் (4 புள்ளி)

(ii) நன்மைகள்
கத்தோலிக்க திருச்சபை கத்தோலிக்க பெற்றோர் மட்டிலே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது.
தேசிய மறைக்கல்வி நடுநிலையம் மறை மாவட்ட மறைக்கல்வி நடுநிலையம் நிறுவப்பட்டது. (4 புள்ளி)

தீமைகள்
பாடசாலைகளிலே கத்தோலிக்க மாணவ மாணவியருக்கு மறையறிவு மறுக்கப்பட்டது
பாடசாலைகளில் கத்தோலிக்க ஆசிரியர், கத்தோலிக்க அதிபர் இல்லாத நிலை உருவாயிற்று (4 புள்ளி)

(iii) கிறிஸ்தவ மதக்கோட்பாடுகள் எனும் நூலை வெளியிட்டார். சீர்திருத்த சபைகளின் முக்கிய தளமாக ஜெனீவாவை மாற்றினார்.
- திருச்சபையும் அரசாங்கமும் ஒத்துழைத்து செயற்படும் ஒரு சமூகமாக ஜெனீவாவை உருவாக்கினார்.
- கல்வியை ஊக்குவிக்கும் வகையில் ஜெனீவாவில் பல்கலைக்கழகம் ஒன்றை ஆரம்பித்தார்.
- பாடசாலைகளை ஆரம்பித்தார் (4 புள்ளி)



Scanned with CamScanner

(iv) ஆட்சிப் பொறுப்பிற்கு ஆட்சியாளர் நியமித்தல்.
- யுத்த நடவடிக்கைகளில் பங்கெடுத்தல்
- வரிவசூலித்தல்
- போர்வீரர்களை பலப்படுத்தல்
- பணம் சொத்துக்களைத் திரட்டுதல்
- அரசியற் செயற்பாடுகளில் ஈடுபடுதல் (4 புள்ளி)

(v) திருத்தந்தை ஐந்தாம் லியோ
திருத்தந்தை பதின்மூன்றாம் கிரகோரியார்
திருத்தந்தை ஐந்தாம் கிக்ஸ்துஸ்
திருத்தந்தை 3வது யூலியஸ் (4 புள்ளி)

## பகுதி - II

04)

(i) 3ம் நூற்றாண்டு முதல் எகிப்தில் சிரியாவில் கிறிஸ்தவ உத்தமதன வாழ்வை விரும்பியவர்கள். காலப்போக்கில் வனத்துத்தந்தை என அழைக்கப்பட்டனர்.
இவர்களில் முக்கியமானவர்கள் வனத்து அந்தோனியார் பக்கோமியுஸ் புனித பசில் ஆவர்.
இவர்களைப் பற்றி சிறு விளக்கவுரை எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.

(ii) ஆசிர்வாதப்பர் சபையினதும் குளுணி சபையினதும் துறவறசட்ட ஒழுங்குகளைப் பிழையின்றி முன்னெடுத்துச் செல்லும் குறிக்கோளுடன் சிஸ்டர்சியன் துறவறமுறை ஆரம்பமானது (2 புள்ளி)

கவனம் செலுத்திய துறைகள்
- தனிமையில் தவவாழ்வு
- ஏழ்மை
- வீட்டுவேலை
- குழுவாழ்க்கை (3 புள்ளி)

(iii) புனித லொயலா இஞ்ஞாசியரால் ஆரம்பிக்கப்பட்ட இச்சபைக்கு 1540 இல் திருத்தந்தையின் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்டது.
சிறுவர் கல்வியற்றோருக்கு திருமறையைப் போதித்தனர்
உயர்கல்வி நிறுவனங்களையும் பல்கலைக்கழகங்களையும் நிறுவி கத்தோலிக்க திருமறையை வளர்த்தனர்.
சீர்திருத்த சபைகளின் சவால்களுக்கு முகங்கொடுக்க கத்தோலிக்க திருச்சபையில் மறுமலர்ச்சியை இயேசு சபையின் இளம் குருக்கள் முன்னெடுத்தனர்.
திருதெந்தின் பொதுச்சங்க கோட்பாடுகளை உலகில் முன்னெடுத்துச் சென்றனர்
மறைதூதுப்பயணங்களை மேற்கொண்டு உலகின் பல நாடுகளில் கத்தோலிக்க திருச்சபைகளைப் பரப்பினர் (5 புள்ளி)

(iv) புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையினர் செபமும் வேலையும் எனும் கருத்தை தமது விருதுவாக்காகக் கொண்டனர்
புனித ஆசீர்வாதப்பர் சபைத்துறவிகள் கடும் உழைப்பை மேற்கொண்டனர். இவ்வாறாக துறவிகள் செயற்பட்டமை உடல் உழைப்பின் மேன்மையை எடுத்துக்காட்டுவதாக அமைந்தது
துறவிகள் பெரும்பாலும் காடுகளை அழித்து அவற்றை சிறந்த விவசாய நிலங்களாக மாற்றியுள்ளனர்.
துறவிகள் எல்லாத் தொழிலையும் சமமாகக் கருதினர். உதாரணம் கால்நடை வளர்த்தல், பால் கறத்தல், தேனீ வளர்த்தல், அறுவடை செய்தல். இவர்கள் ஐரோப்பாவில் விவசாய நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டதுடன் மாற்றுப் பயிர்ச்செய்கை போன்ற புதிய தொழில்நுட்பங்களையும் அறிமுகப்படுத்தினர் (5 புள்ளி)

(5 x 4 = 20 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

05)

(i) உரோ 2:12-19, 7: 7-20, கலா 3: 15-29

- மனிதன் சட்டத்தை அனுசரிப்பதால் அல்ல. மாறாக இயேசுக் கிறிஸ்துவில் கொள்ளும் விசுவாசத்தினால் மட்டுமே இறைவனுக்கு ஏற்புடைமை ஆகின்றான். இறைவனின் ஒரு இரக்கச்செயல் இறைவனின் அன்புக்கொடை அது ஒரு இறையருள்
- சட்டம் கடவுளிடமிருந்து வருவது புனிதமானது. ஆனால் ஊனியல்பான மனிதனை அது மீட்க முடியாது
- சட்டம்தான் மனிதனை பாவத்திற்கு இட்டுச்செல்கின்றது.
- தொடக்ககாலத்தில் சட்டம் இறைமக்களுக்கு ஒரு வழிமுறையாகவும், துணை ஆசானாகவும் இருந்தது. மீட்பர் வந்துவிட்டதால் சட்டம் அர்த்தமாகிவிட்டது.
- ஆபிரகாம் விசுவாசத்தினால் கடவுளுக்கு ஏற்புடையவராக்கப்பட்டார் (5 புள்ளி)

(ii) அழிவுக்குரிய உடல் அழியாத உடலாக உயிர்பெற்று எழுகின்றது
மதிப்பற்ற உடல் மாண்புக்குரியதாய் உயிர் பெற்று எழுகிறது
வலுவற்ற உடல் வல்லமையுள்ளதாய் உயிர் பெற்று எழுகிறது
மனித இயல்பு கொண்ட உடல் ஆவிக்குரிய உடலாக உயிர்பெற்று எழுகின்றது

(5 புள்ளி)

(iii) அந்தியோக்கிய இறையியல் கல்லூரியின் நிறுவுனர் அந்தியோக்கிய குருவாகிய லூசியனி எனப் பாரம்பரியம் கூறுகின்றது.
இக்கல்லூரியின் சிறப்பு அம்சங்கள்,

- தமது இறையியலில் அரிஸ்ரோட்டிலின் மெய்யியலைப் பயன்படுத்தல்
- மூல எபிரேய உதவியுடன் கிரேக்க விவிலியமாகிய செப்துவாஜின்ரை மறுமதிப்புச் செய்து, விவிலிய ஆராய்ச்சியில் கவனம் செலுத்துதல்
- திருவிவிலியத்தை விளக்குவதற்கு நேர்ப்பொருள் உட்கருத்து (சொல்லுக்குச் சொல் விளக்கம்) முறையைப் பயன்படுத்தல்
- இறையியலை கிறிஸ்துவின் தெய்வீகத்திலிருந்து திருவிவிலிய அடிப்படையிலும் ஆரம்பித்தல்
- இறையியலில் மூவொரு இறைவனின் மூன்று ஆட்கள் கிறிஸ்துவின் மனித தெய்வீக இயல்புகள் என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் (5 புள்ளி)

agaram.lk

(iv) பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கிரேக்க ஆட்சியின் கீழ் பல இடங்களிலும் பரவி வாழ்ந்த யூதர்கள் கிரேக்க கலாச்சாரத்தினால் பாதிக்கப்பட்டவர்களாகவும் கிரேக்க மொழியை நன்கு அறிந்தவர்களாகவும் இருந்தனர்.

- பழைய ஏற்பாட்டில் அங்கீகாரம் பெற்றவையாக 46 நூல்கள் உண்டு. அவற்றுள் பெரும்பாலானவை எபிரேய மொழியில் எழுதப்பட்டுள்ளன. சில நூல்கள் அரமேய மொழியிலும் மேலும் சில நூல்கள் கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டுள்ளன.
- புதிய ஏற்பாட்டின் எல்லா நூல்களும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கிரேக்க மொழி திருவிவிலியத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு
- கிரேக்கத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட பழைய ஏற்பாட்டு நூல் செப்துவாஜிந்து அல்லது 'எழுபதின்மர்நூல்' என அழைக்கப்படுகின்றது.
- இம்மொழிபெயர்ப்புச் செய்யப்பட்ட இடம், காலம் பற்றி நோக்கும் போத இது அண்ணளவாக கி.பி 275 இல் தாலமி பில்டெல்புஸ் ஆட்சியின் போது எகிப்து நாட்டின் அலெக்சாந்திரியா நகரில் மேற்கொள்ளப்பட்டது.

(5 x 4 = 20 புள்ளிகள்)

06)

(i) சீரோ மலபார், சீரோ மலங்காரா என இரு சபைகள் அங்கு காணப்படுகின்றன. இவ் இரு சபையினரும் கத்தோலிக்க மறையைச் சார்ந்தவர்கள்
திருத்தந்தையின் வழிகாட்டலுக்குள் வாழ்ந்து கீழைத்தேய மரபு முறைகளை ஏற்றுக் கொண்டவர்கள் சீரோ மலபார் திருச்சபையினர் ஆவர்.



Scanned with CamScanner

மேலும் திருத்தந்தையின் வழிகாட்டலை ஏற்று மேற்கு சீரியமரபு முறைகளை தமது வழிபாடுகளில் பின்பற்றியவர்கள் சீரோ மலங்காரா திருச்சபையினர் என அழைக்கப்பட்டனர். சீரோ மலபார், சீரோ மலங்காரா திருச்சபை ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் "கூணன் சிலுவை ஆணை" என்ற கிளர்ச்சியைத் தொடர்ந்து பிரிந்து தனியே சென்று வைதீக திருச்சபையை உருவாக்கினர். இது இரண்டாகப் பிரிந்தது.

i. மலங்காரா சிரிய வைதீக திருச்சபை

ii. மலங்காரா வைதீக சிரிய திருச்சபை

(5 புள்ளி)

(ii) மத்தேயு றிச்சி அடிகளாரின் போதனை

கி.பி 1615 இல் திருத்தந்தை 5ம் பவுல் சீனக்குருக்களுக்கு தங்கள் சொந்த மொழியில் செபிப்பதற்கும், திருப்பலியையும் அருட்சாதனங்களையும் நிறைவேற்றுவதற்கும் அனுமதி கொடுத்தார்.

கி.பி 1715 இல் சீன வழிபாட்டு முறை நிராகரிக்கப்பட்டு எல்லாக்குருக்களும் உரோமையின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளப் பணிக்கப்பட்டனர். இதனால் சீன மன்னன் வெளிநாட்டு கிறிஸ்தவ மதம் சீனாவில் போதிக்கத்தடை செய்தனர். (5 புள்ளி)

(iii) புனித தோமையார் கிறிஸ்தவர்கள் பற்றி விளக்கி எழுதியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்.

(iv) இலத்தீன் திருச்சபையின் அடிப்படை அமைப்பு முறையானது பங்கு என்று அழைக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் வாழுகின்ற குடும்பங்கள் இணைந்து ஒரு பங்கினை உருவாக்குகின்றார்கள். பங்கின் ஆன்மீக வழிகாட்டியாக பங்குத்தந்தை செயற்படுவார். பங்கில் பங்குத்தந்தை பங்கு மக்களுடன் இணைந்து செயற்படுவர்.

பல பங்குகள் இணைந்து மறைமாவட்டம் உருவாகின்றது. அதன் தலைவராக ஆயர் செயற்படுவர்.

முழு இந்தியாவிலும் உள்ள இலத்தீன் திருச்சபையில் 117 மறைமாவட்டங்கள் உள்ளன. இம் மறைமாவட்டங்கள் இணைந்து மாநில இந்திய நாட்டு ஆயர் மன்றத்தை உருவாக்கியுள்ளன.

(5 புள்ளி)

(5 × 4 = 20 புள்ளி)

07)

(i) 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த கொஸ்மஸ் இன்டோப்லேடஸ் என்னும் எழுத்தாளர் தமது கிறிஸ்தவ வபைகளின் விபரணம் என்னும் நூலில்,

பாரசீக வியாபாரிகள் தப்ரபேன் என்றழைக்கப்பட்ட இலங்கைக்கு வருகை தந்து தங்கியிருந்தனர் என்றும், அவர்கள் பாரசீக கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர் என்றும், பாரசீக வழிபாட்டை நடத்துவதற்காக பாரசீக ஆயர் ஒருவரினதும் திருத்தொண்டர் ஒருவரது பணியைப் பெற்றுக்கொண்டனர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனுராதபுரத்தில் கி.பி 1912 இல் கண்டுபிடிக்கப்பட்ட நெஸ்தோரிய சிலுவை

புனித தோமா, புனித பர்தலோமியுஸ், புனித யூதாதேயு ஆகிய திருத்தூதர்கள் இலங்கையில் (தப்ரபேனில்) மறையைப் போதித்துள்ளமை

கி.பி 9ம் நூற்றாண்டில் சிகிரியா கால அரசவையில் நான்கு கிறிஸ்தவ அமைச்சர்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது. (5 புள்ளி)

(ii) I. அரசாங்கப் பாடசாலைகள் II. மிஷன் பாடசாலைகள் III. பிரிவெனப் பாடசாலைகள் குறிப்பிட்டு விளக்கியிருப்பின் 5 புள்ளிகள் வழங்கவும்)

(iii) இவர்களே முதலில் இலங்கைக்கு வருகை தந்த மறை பணியாளர்கள் ஆலயங்களுக்கு அண்மையில் பாடசாலைகளை அமைத்தனர்.

கல்வி மூலமாக கத்தோலிக்க மறையைப் பரப்பினர்.

கோவில் பற்று பாடசாலை நிறுவி அங்கு செபம் செய்தல் வினாவிடை முறையிலான மறையறிவை சுதேச மொழிகளில் அளித்தனர்.

கல்லூரிமுறை - இது உயர்கல்வி நிறுவனம். ஐரோப்பிய குருத்துவக் கல்லூரிக்கு ஒத்ததாக அமைந்தது.

அரசர்களின் கல்விக்கூடங்கள் - போர்த்துக்யோால் சிறைப்பிடிக்கப்பட்ட அல்லது அடைக்கலம் புகுந்த அல்லது கல்வி கற்க ஒப்படைத்தவர்களுக்கு அரச கல்வியை அளித்தனர். (5 புள்ளி)



agaram.lk

Scanned with CamScanner

(iv) இலங்கையின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்தவர்களில் டொன்பீற்றர், S.G பெரேரா, எட்மன்பீரிஸ், பீற்றர் பிள்ளை, தனிநாயகம் அடிகள் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். கல்வி நிர்வாகத்தில் நிர்வாகிகளாகவும், அதிபர்கள் ஆசிரியர்களாகவும் பெரும் எண்ணிக்கையான கிறிஸ்தவர்கள் பணியாற்றினர். கணிசமான குருக்கள் துறவியர், கன்னியர்கள் பணியாற்றினர்.

கணிசமான குருக்கள், துறவியர், கன்னியர்கள் பணிபுரிகின்றனர். இனமத பேதமின்றி கிறிஸ்தவ பாடசாலைகளில் ஏனைய சமய மாணவரும் கல்வி கற்கின்றனர்.

ஆங்கிலக்கல்விப் போதனையில் திருச்சபை பணியாற்றுகின்றது

கொழும்பிலுள்ள அக்குவைனஸ் கல்லூரி திருச்சபையால் ஆரம்பிக்கப்பட்டு இப்பொழுது பல்கலைக்கழக நிலைக்கு உயர்ந்துள்ளது. ஆங்கிலமும், பல துறைசார் கல்வியும் சிறப்பாக நடைபெறுகின்றது.

(5 புள்ளி)

(5 × 4 = 20 புள்ளி)

08)

(i)
- பாஸ்கா திருவிழா
- பெந்தக்கோஸ்து விழா
- புளியாத அப்பவிழா
- கூடாரவிழா
- பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாள்
- கோயில் அர்ப்பணவிழா

(இவற்றுள் 4 குறிப்பிட்டு இருப்பின் 2 புள்ளிகளும், இரண்டினை விளக்கி எழுதியிருப்பின் 3 புள்ளிகளும் வழங்கவும்)

(ii) உயர்குலத்தோர்

நடத்தரவர்க்கத்தினர்

தாழ்த்தப்பட்டோர்

(மூன்று சமுதாயப் பிரிவுகள் குறிப்பிட்டு இருப்பின் 2 புள்ளிகளும் ஒன்று விளக்கி எழுதியிருப்பின் 3 புள்ளிகளும் வழங்கவும்)

(iii)
- மண ஒப்பந்தம் 'ஆறால்' என்று அழைப்பர்
- திருமணச்சடங்கு பெண்வீட்டிலிருந்து ஊர்வலமாக மணகன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர்
- வரும் விருந்தினருக்கு திருமண உடை அளிக்கப்படும்
- திருமணம் முடிந்ததும் தனிக்குடித்தனம் அமர்த்தப்படுவர்
- மணவிலக்கு வழங்கும் அதிகாரம் அரசனுக்கு உண்டு
- விபச்சாரம் செய்தால் மரணதண்டனை வழங்கப்படும்
- அடிக்கடி விருந்துகள் நடைபெறும்
- தலை முடியை வளர்ப்பர்

(5 புள்ளி)

(iv) சுத்திகரிப்புச் சடங்கு :
- ஒரு யூதன் பிறந்த எட்டாம்நாள் விருத்தசேதனம் செய்தல்
- பெற்றோர் பிறந்த குழந்தையை கோயிலுக்கு கொண்டு சென்று இரண்டு காட்டுப்புறாக்கள் அல்லது இரு மாடப்புறாக்கள் கோவிலுக்கு காணிக்கையாக செலுத்துதல்
- இறந்தோரின் உடலைக் குளிப்பாட்டி பரிமளத்தைலத்தால் பூசி தூய பரிவட்டத்தால் சுற்றிப் புதைப்பர்
- நோயினால் பீடிக்கப்பட்டவன் ஊருக்கு புறம்பே இருக்குமாறு அப்புறப்படுத்தல்
- நோய் குணமடைந்தவன் குருக்களிடம் காட்டி நலம் பெற்றதற்கான அத்தாட்சிப்பத்திரம் பெறல்

$(2\frac{1}{2}$ புள்ளி)

பாவப்பரிகாரச் சடங்கு
- இவ்விழா திஸ்ரி மாதத்தில் (செப்டம்பர், அக்டோபர்) கொண்டாடப்பட்டது.
- பாவங்களுக்கு பரிகாரமாக ஒறுத்தலையும் நோன்பையும் மேற்கொள்ள வேண்டும்.
- ஆண்டிற்கு ஒருமுறை மட்டும் ஜெருசலேம் திருக்கோவிலின் மூலஸ்தானத்திற்குள் நுழைந்து தூபம் ஒப்புக்கொடுப்பர்

$(2\frac{1}{2}$ புள்ளி)

$(2\frac{1}{2} + 2\frac{1}{2} = 5$ புள்ளி)

(5 × 4 = 20 புள்ளி)



agaram.lk
Scanned with CamScanner